**CNR.No.TNTU07-000132-2015**
**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி,திருப்பத்தூர் மாவட்டம்**
**முன்னிலை :** B.ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, வாணியம்பாடி.
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை
(2055 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13ம் நாள்)
**அசல் வழக்கு எண்.47/2015**

1. லட்சுமணன்
   த/பெ பூங்காவனம்
2. கம்சலா
   க/பெ லட்சுமணன்
3. பெருமாள்
   த/பெ லட்சுமணன்
4. தமிழரசி
   த/பெ லட்சுமணன்
5. கலைவாணி
   த/பெ லட்சுமணன்
6. சபரீன்
   த/பெ லட்சுமணன்
7. விஸ்வநாதன்
   த/பெ லட்சுமணன்
8. வில்வநாதன்
   த/பெ லட்சுமணன்

(இ.ம.எண்.1/2024ல் கடந்த 14.10.2024ல்
பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி,
2 முதல் 8 வாதிகள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர்.) .. வாதிகள்

/ எதிர் /

1. சிவகாமி (இறப்பு)
   க/பெ துரைராஜ்
   (இ.ம.எண்.699/2019ல் கடந்த 13.12.2019ல்
   பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி,
   திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)
2. கங்கன் (இறப்பு)
   (இ.ம.எண்.420/2016ல் கடந்த 19.09.2016ல்
   பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி,
   திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)

3. லலிதா
த/பெ கங்கன்
4. மீனாட்சி
த/பெ கங்கன்
5. சிவலிங்கம்
த/பெ கங்கன்
6. சுதாகர்
த/பெ திலகர்
7. ராவணன்
த/பெ திலகர்
8. ரமாபாய்
த/பெ திலகர்
9. புனிதவேணி
த/பெ திலகர்
10. லட்சுமி
த/பெ திலகர்
11. பன்னீர்
த/பெ திலகர்
12. பாப்பம்மாள்(இறப்பு)
க/பெ மின்னன் (எ) முனிரத்தினம்
(இ.ம.எண்.561/2018ல் கடந்த 24.09.2018ல் /
பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி,
திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)
13. ராமுஅம்மாள்
க/பெ கண்ணன்
14. ராதாம்மாள்
க/பெ சிவராஜ்
15. பாத்திமா
க/பெ தமிழரசன்
16. ரீட்டா
க/பெ சார்லஸ்
17. பாண்டியன்
த/பெ வள்ளிக்கண்ணன்
18. இளங்கோவன்
த/பெ சிகாமணி
19. கொடிமலர்
க/பெ வினோத்

20. குப்பம்மாள்
க/பெ தங்கராஜ்
21. சரளா
த/பெ தங்கராஜ்
22. சரத்குமார்
த/பெ தங்கராஜ்
23. அருண்குமார்
த/பெ துரைராஜ்
24. சிவசங்கரி
த/பெ துரைராஜ்
25. கமலா
க/பெ செல்வம்
26. திவ்யா
த/பெ செல்வம்
27. பிரிசில்லா
த/பெ செல்வம்
28. அஸ்வின்குமார்
த/பெ செல்வம்
29. முனியம்மாள்
க/பெ முனிசாமி
(இ.ம.எண்.561/2018ல் கடந்த 24.09.2018ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி, 20 முதல் 29 வரையிலான பிரதிவாதிகள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர்)

.... பிரதிவாதிகள்

அசல் வழக்கானது இறுதியாக, கடந்த 12.03.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.உமர், அவர்கள் ஆஜராகியும், 15, 16 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ.சி. தேவக்குமார், அவர்கள் ஆஜராகியும், மற்ற பிரதிவாதிகள் அனைவரும் தோன்றாதரப்பினர்கள் நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்பு</u>**

**01)** தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/7 பாகம் வேண்டியும், அதன்படி வழக்கறிஞர் ஆணையரை நியமித்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், கடந்த 26.09.2014 தேதியிட்டு, 13, 14 பிரதிவாதிகள் பெயரில் வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6653/2014, 6654/2014 மற்றும் வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 25.09.2014 தேதியிட்டு, 17ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6599/2014, 18ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6600/2014 மற்றும் 19ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6601/2014 போன்றவை சட்டப்படி செல்லாதவைகள் என விளம்புகை செய்ய வேண்டியும், தாவா சொத்துக்களை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>02) திருத்தியமைக்கப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:</u>**

1ம் வாதியின் உடன்பிறந்த சகோதரர்கள் கோவிந்தன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் ஆவார்கள். 1ம் வாதியின், உடன் பிறந்த சகோதரிகள் பாக்கியம்மாள், மணிமேகலை (எ) சேட்டு அம்மாள், 12ம் பிரதிவாதி பாப்பம்மாள், 13ம் பிரதிவாதி ராமுஅம்மாள், 14ம் பிரதிவாதி, ராதாம்மாள் ஆகியோர்கள் ஆவார்கள்.

தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் ஆதியில் 1ம் வாதியின் பெற்றோர்களான பூங்காவனம் மற்றும் குப்பம்மாள் தம்பதியருக்கு சொந்தமானதாகும். சொத்துக்கள் குறித்து எந்தவொரு ஆவணங்களையும், எழுதி வைக்காத நிலையில், கடந்த 1964ல் 1 ம் வாதியின் தாயாரும், கடந்த 1969ல் 1ம் வாதியின் தகப்பனாரும் இறந்துள்ளனர்.

1ம் வாதியின் பெற்றோரது இறப்பிற்குப்பின், குடும்ப சொத்துக்களை கூட்டுகுடும்ப கர்த்தா என்ற அடிப்படையில் 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவர் நிர்வாகம் செய்து வந்துள்ளார். கூட்டு குடும்ப சொத்துக்களில் கூட்டுகுடும்ப வருவாய்மூலம் கிடைக்கப்பெற்றுள்ள வருமானத்தை கொண்டு, மேற்படி பாலகிருஷ்ணன் பெயரில் பல்வேறு சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டுள்ளது. அவைகள் அனைத்தும், கூட்டுகுடும்ப சொத்துக்கள் ஆகும்.

1ம் வாதியின் சகோதரர் கோவிந்தன் என்பவர் 1ம் பிரதிவாதியையும், சகோதரி பாக்கியம்மாள் என்பவர் 2 முதல் 5 பிரதிவாதிகளையும், மற்றொரு சகோதரி மணிமேகலை (எ) சேட்டுஅம்மாள் என்பவர் 6 முதல் 11 பிரதிவாதிகளையும், சட்டப்படியான வாரிசுகளாக விட்டு இறந்துள்ளனர்.

1 ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் திருமணம் முடிக்காத நிலையில், கடந்த 06.11.2014ல் மர்மமான முறையில் வாரிசுகள் இன்றி இறந்துள்ளார். அவரது இறப்பிற்கு 13ம் பிரதிவாதியும், அவரது ஆட்களும் காரணம் ஆவார்கள்.

தாவா சொத்துக்களில், 1ம் வாதிக்கு 1/7 பங்குரிமை உள்ளது. இந்நிலையில், அதனை மறைத்து, 13ம் பிரதிவாதியும், மற்ற பிரதிவாதிகளும் மோசடியாக கூட்டு சேர்ந்துகொண்டு, 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் மூலமாக தாவா சொத்துக்கள் குறித்து, சட்டத்திற்கு புறம்பாக 15 முதல் 19 பிரதிவாதிகள் பெயரில் பல்வேறு ஆவணங்களை உருவாக்கியுள்ளனர். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லாதவைகள் ஆகும்.

மேற்படி பாலகிருஷ்ணனின் இறப்பு குறித்து, 1ம் வாதியால், காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டு, புலன்விசாரணை நிலுவையில் உள்ளது.

மேலும், மேற்படி பிரச்சனை குறித்து, முறையான விசாரணை வேண்டுமென ரிட்மனு எண்.247/2014 என்ற மனுவை 1ம் வாதி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, விசாரணை நிலுவையில் உள்ளது.

வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளபோது, 1,2 மற்றும் 12 பிரதிவாதிகள் இறந்துள்ளனர். தாவா சொத்துக்களில் 1ம் வாதிக்குள்ள 1/7 பங்குரிமையை பிரதிவாதிகள் கொடுக்க மறுத்துள்ள நிலையில், தாவா சொத்துக்களை சட்டத்திற்கு புறம்பாக உரிமைமாற்றம் செய்ய பிரதிவாதிகள் முயற்சித்து வருகின்றனர்.

ஆகையால், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/7 பாகம் வேண்டியும், அதன்படி வழக்கறிஞர் ஆணையரை நியமித்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், கடந்த 26.09.2014 தேதியிட்டு, 13, 14 பிரதிவாதிகள் பெயரில் வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6653/2014, 6654/2014 மற்றும் வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 25.09.2014 தேதியிட்டு, 17ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6599/2014 , 18ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6600/2014 மற்றும் 19ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6601/2014 போன்றவை சட்டப்படி செல்லாதவைகள் என விளம்புகை செய்ய வேண்டியும், தாவா சொத்துக்களை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>03) 1, 3, 4, 5, 12 பிரதிவாதிகளால் தனியாகவும், 15, 16 பிரதிவாதிகளால் தனியாகவும், 17, 18, 19 பிரதிவாதிகளால் தனியாகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ள தனித்தனியான எதிர்வழக்குரைகள் மற்றும் 15, 16</u>**

**<u>பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றின் பொதுவான சுருக்கம் :</u>**

தாவா சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை வாதி நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

வழக்குரையில், வாதிக்கும், 1 முதல் 14 பிரதிவாதிகளுக்கும் இடையில் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப உறவுமுறைகள் உண்மையானதாகும். தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் ஆரம்பத்தில், வாதியின் தாயார் குப்பம்மாள் மற்றும் தகப்பனார் பூங்கானவனத்திற்கு சொந்தமான 3 ஏக்கர் விஸ்தீரண சொத்துக்களாகும்.

வாதியின் பெற்றோர் இறந்துள்ள நிலையில், மேற்படி சொத்து குறித்து, வாதி குடும்பத்திற்கு இடையில், வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது. அதன்படி, வாதிக்கும், அவரது சகோதரர் கோவிந்தன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு தலா 0.75 சென்ட் சொத்து தனித்தனியாக பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. வாதியின் 5 சகோதரிகளுக்கும் சேர்த்து மொத்தமாக 0.75 சென்ட் சொத்து பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் வாதிக்கு கிடைக்கப்பெற்றுள்ள சர்வே எண்.187/37ல் உள்ள 0.75 சென்ட் சொத்தினை வாதி கடந்த 02.04.1987 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் அவரது சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி சொத்தில், வாதியும், அவரது மகனும் தொந்தரவு செய்த காரணத்தினால், மேற்படி பாலகிருஷ்ணன், அவர்களுக்கு கடந்த 09.10.2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளார்.

மேற்படி, உண்மையை மறைத்து, தாவா சொத்துக்களில், எந்தவொரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என வழக்கு தாக்கல் செய்ய

வாதி முரண்தடை செய்யப்பட்டுள்ளார். வாதியின் சகோதரிகளுக்கு கிடைத்துள்ள 0.75 சென்ட் சொத்தினை அவர்கள் அனைவரும் மேற்படி பாலகிருஷ்ணனுக்கு தகுந்த மறுபயனுக்காக வாய்மொழியாக கிரையம் கொடுத்துள்ளனர்.

வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் தனக்கு கிடைக்கப்பெற்றுள்ள சொத்துக்கள் குறித்து, வருவாய்துறையில் பட்டா பெற்றுள்ளார். பின், மேற்படி சொத்துக்களில், கடந்த 26.09.2014ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் சர்வே எண். 185ல் உள்ள 1 ஏக்கர் 0.22 சென்ட் சொத்தினை 15,16 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து, சொத்துக்களின் சுவாதீனத்தை ஒப்படைத்துள்ளார்.

அதேபோன்று, சர்வே எண். 187/37 பி யில் உள்ள 0.22 சென்ட் சொத்து குறித்து, கடந்த 26.09.2014 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தை 15, 16 பிரதிவாதிகள் பெயரில் மேற்படி பாலகிருஷ்ணன் எழுதிக்கொடுத்து, மேற்படி சொத்தின் சுவாதீனம் ஒப்படைத்துள்ளார். அதன்பின், அவர் இறந்துள்ளதால், இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.65/2015 என்ற வழக்கை 15, 16 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது.

வாதியின் சகோதரரர் கோவிந்தனுக்கு வாய்மொழி பாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 0.75 சென்ட் சொத்தில் தற்சமயம் 1ம் பிரதிவாதி அனுபவசுவாதீனத்தில் இருந்து வருகிறார். 15, 16 பிரதிவாதிகளால், வாதிக்கும், மற்றவர்களுக்கும் எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக அ.வ.எண்.24/2015 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கு சங்கதிகளை வாதி வழக்கில் குறிப்பிடாமல் மறைத்துள்ளார்.

வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவரிடமிருந்து தகுந்த மறுபயனுக்காக 15, 16 பிரதிவாதிகள் கடந்த 26.09.2014ல் கிரையம் பெற்றுள்ளனர். அதேபோன்று, அவரது தனிப்பட்ட சொத்துக்களை 17 முதல் 19 பிரதிவாதிகள் தகுந்த மறுபயனுக்காக கிரையம் பெற்றுள்ளனர். மேற்படி, 15 முதல் 19 வரையிலான பிரதிவாதிகள் அனைவரும் நல்லெண்ண கிரையதாரர்கள்ஆவார்கள்.

மேற்படி, கிரையஆவணங்களும், 15, 16 பிரதிவாதிகள் பெயரில் கடந்த 26.09.2014ல் ஏற்பட்டுள்ள கிரைய ஒப்பந்தமும், உண்மையான ஆவணங்கள் ஆகும். அவைகள் குறித்து கேள்வி எழுப்ப வாதிக்கு சட்டப்படியாக உரிமை இல்லை. தாவாவில் அவசியமான தரப்பினர்கள் கட்சி சேர்க்கப்படவில்லை.

1ம் வாதியால், வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், 2 முதல் 8 வாதிகள் என்ன காரணத்திற்காக வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற விவரத்தை திருத்தியமைக்கப்பட்ட வழக்குரையில் வாதிகள் குறிப்பிட தவறியுள்ளனர். உண்மை சங்கதிகளை எடுத்துரைத்து, சுத்தமான கரங்களுடன் வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்யவில்லை.

வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் உயிருடன் இருந்த காலத்தில், ஆம்பூர் நீதிமன்றத்தில், 15, 16 பிரதிவாதிகள் பெயரில் எழுதிக்கொடுத்துள்ள ஆவணங்களின் சொத்துக்கள் குறித்து, உரிமை விளம்புகை பரிகாரத்திற்காக அ.வ.எண்.72/2007 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதில், மேல்முறையீட்டு வழக்கு எண்.28/2010ல் சாதகமான தீர்ப்பு பெற்றுள்ளார்.

மேற்படி பாலகிருஷ்ணன் உயிருடன் இருந்துள்ள காலத்தில் மேற்படி சொத்துக்கள் குறித்து, ஏற்கனவே சண்முகம் என்பவருக்கு

பொதுஅதிகார ஆவணம் எழுதி கொடுத்து, பின்னர் அதனை ரத்து செய்து கொடுத்துள்ளார். 15 முதல் 19 பிரதிவாதிகளுக்கு அவரால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்கள் தொடர்பான சொத்துக்கள் அனைத்தும், அவரது தனிப்பட்ட சொத்துக்களாகும்.

அதன்படி, 15 முதல் 19 பிரதிவாதிகள் பெயர்களில் அவரவர் சொத்துக்களுக்கான பெயர் மாற்றங்கள் வருவாய்துறை ஆவணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களில், எந்தவொரு பாகப்பிரிவினையும், இதுநாள்வரையில் ஏற்படவில்லை என வாதி வழக்கில் குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு மாறானதாகும்.

தாவாவிற்கு வழக்குமூலம் இல்லை. வழக்குரை சொத்துக்கள் விவரம் தவறானது. தாவாவில் வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது. ஆகையால், 15 முதல் 19 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்துக்களை சட்டத்திற்கு புறம்பாக அபகரிக்கும் நோக்கில், பொய்யான சங்கதிகளுடன் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**04)** தாவா வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தபின், இவ்வழக்கில் முடிவு காணவேண்டிய கீழ்க்கண்ட எழுவினாக்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன.

(i) தாவா சொத்துக்கள் வாதி குடும்பத்து கூட்டுகுடும்ப பூர்வீகச் சொத்துக்கள் என்பதை வாதி வழக்கில் நிரூபித்துள்ளாரா?

(ii) வழக்குரை ஆவண எண்.6ல் குறிப்பிட்டுள்ளபடி, வாதி குடும்பத்தில் ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்ற முக்கியமான சங்கதியை வாதி வழக்கில் மறைத்துள்ளாரா?

(iii) வழக்குரை சொத்து விவரத்தில் 1, 3 முதல் 6 இனச் சொத்துக்களுக்கு உட்பிரிவு எண் மற்றும் செக்குபந்தி விவரங்கள் குறிப்பிடாமல் உள்ளது சட்டப்படி ஏற்புடையதா?

(iv) தாவா சொத்துக்களில் வாதிக்கு சட்டப்படியாக பங்குரிமை உள்ளதா? அவ்வாறெனில் எவ்வளவு?

(v) கடந்த 26.09.2014 தேதியிட்டு, 13, 14 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண். 6653/2014 ஆவணம் சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

(vI) கடந்த 26.09.2014 தேதியிட்டு, 13,14 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6654/2014 ஆவணம் சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா?

(vii) கடந்த 25.09.2014 தேதியிட்டு, 17ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண். 6699/2014 ஆவணம் சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

(viii) கடந்த 25.09.2014 தேதியிட்டு, 18ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6600/2014 ஆவணம் சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

(ix) கடந்த 25.09.2014 தேதியிட்டு, 19ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவண எண்.6601/2014 ஆவணம் சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

(x) தாவாவில் வாதி முன்வைத்துள்ள பாகப்பிரிவினை தொடர்பான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வாதி பெறமுடியுமா?

(xi) அ.வ.எண்.72/2007 மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண்.28/2010 ஆகியவற்றின் முடிவுகள் இவ்வழக்கிற்கு முன்தீர்ப்பு தடைகோட்பாடு என்ற அடிப்படையில், பொருந்தக்கூடியதா?

(xii) பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கில் வாதி முன்வைத்துள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், வாதி பெறமுடியுமா?

(xiii) வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன ?

**05)** வாதிகள் தரப்பில் 2ம் வாதி கம்சலா என்பவர் வா.சா.1 ஆகவும், நூருல்லாபாஷா என்பவர் வா.சா.2 ஆகவும், ராஜேந்திரன் என்பவர் வா.சா.3 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ளனர். வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**06)** தாவாவை எதிர்வழக்காடியுள்ள 15, 16 பிரதிவாதிகள் தரப்பில் 16ம் பிரதிவாதி ரீட்டா என்பவர் பி.சா.1 ஆகவும், ராஜா என்பவர் பி.சா.2 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். 15, 16 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதத்திற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**07)** இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது.

**08) எழுவினாக்கள் 1 முதல் 3ற்கான தீர்வு:–**

இவ்வழக்கில், வனையப்பட்டுள்ள எழுவினாக்கள் 1 முதல் 3 ஆகியவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையதாக உள்ளதால், மேற்படி மூன்று எழுவினாக்களையும், இந்நீதிமன்றம் ஒருங்கிணைந்த தீர் முடிவிற்கான பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

1ம் வாதியின் உறவினர்கள் 1 முதல் 14 பிரதிவாதிகள் ஆவார்கள். 12ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகள் 20 முதல் 29 வரையிலான பிரதிவாதிகள் ஆவார்கள். 1ம் வாதியின் சட்டப்படியான வாரிசுகள் 2 முதல் 8 வாதிகள் ஆவார்கள். வழக்கில் தரப்பினர்களாக உள்ள 15 முதல் 19 வரையிலான பிரதிவாதிகள் வாதிகள் குடும்பத்திற்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத மூன்றாம் நபர்கள் ஆவார்கள். மேற்படி வழக்கு சங்கதி உண்மை என தாவாவை எதிர்வழக்காடியுள்ள 15, 16 பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

தாவா வழக்குரை சொத்து விவரத்தில், வாதிகளால் மொத்தம் பதிமூன்று இனங்களாக சொத்துக்கள் தனித்தனியாக பிரித்து காட்டப்பட்டுள்ளன. தாவா சொத்துக்களும் இதர சொத்துக்களும் ஆரம்பத்தில் 1ம் வாதியின் பெற்றோரான பூங்காவனம் மற்றும் குப்பம்மாள் ஆகியோர்களுக்கு சொந்தமானது என வழக்கில் கூறப்பட்டுள்ளது.

1ம் வாதியின் குடும்ப உறவினர்களான 1, 3, 4, 5, 12 பிரதிவாதிகளால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 1ம் வாதியின் பெற்றோருக்கு சுமார் 3 ஏக்கர் சொத்து மட்டும் சொந்தமானது என கூறப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், வாதிகள் வழக்கில் குறிப்பிட்டுள்ள 13 இனச் சொத்துக்களும் 1ம் வாதியின் பெற்றோருக்கு சொந்தமானது என்பதை முதலில் நிரூபிக்கும்சுமை இவ்வழக்கில் வாதிகளை சார்ந்துள்ளது.

வாதிகளால் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள கடந்த 27.10.1957 தேதியிட்ட 1ம் வாதியின் தாயார் குப்பம்மாள் என்பவர் பெயரில் உள்ள வா.சா.ஆ.1 கிரையஆவணத்தின் சான்றிட்ட நகல், வழக்குரை சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ள 1வது இனச் சொத்து 1ம் வாதியின் தாயாருடைய தனிப்பட்ட சொத்து என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

கடந்த 17.11.1959 தேதியிட்டு 1ம் வாதியின் தகப்பனார் பூங்காவனம் என்பவரின் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ள வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்மூலம், தாவா 2வது இனச் சொத்து, 1ம் வாதியின் தகப்பனாருடைய தனிப்பட்ட சொத்து என்பதை கண்டறிந்துகொள்ள முடிகிறது.

வாதிகளால் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள கடந்த 05.07.1962 தேதியிட்ட வா.சா.ஆ.3 பதிவுசெய்யப்பட்ட கிரையஆவணத்தின் சான்றிட்டநகல் மூலமாக, தாவா 3வது இனச் சொத்து 1ம் வாதியின் தாயார் பெயரில் உள்ள தனிப்பட்ட சொத்து என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

கடந்த 17.09.1964 தேதியிட்டு, 1ம் வாதியின் தாயார் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ள வா.சா.ஆ.4 பதிவுசெய்யப்பட்ட கிரையஆவணத்தின் சான்றிட்ட நகல் மூலமாக, தாவா 4வது இனச்சொத்து 1ம் வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்ற உண்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

வாதிகள் இவ்வழக்கில் குறியீடு செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணமான கடந்த 24.01.1966 தேதியிட்ட பதிவுசெய்யப்பட்ட கிரையஆவணத்தின் நகல் மூலமாக, தாவா 5, 6 இனச் சொத்துக்கள் 1ம் வாதியின் தாயாரது தனிப்பட்ட சொத்துக்கள் என்பதை கண்டறிந்துகொள்ள முடிகிறது.

தாவா வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள 7 முதல் 13 வரையிலான இனச்சொத்துக்கள் 1ம் வாதியின் பெற்றோர் பெயரில் இருந்துள்ளது என்பதை காட்டக்கூடிய எந்தவொரு ஆவணச்சான்றுகளையும் வாதிகள் இவ்வழக்கில் முன்னிலைப் படுத்தவில்லை.

வாதிகள் இவ்வழக்கில் குறியீடு செய்துள்ள கடந்த 02.04.1987 தேதியிட்ட வா.சா.ஆ.6 கிரையஆவணத்தின் சான்றிட்ட நகல் மூலமாக, தாவா 7வது இனச் சொத்தை 1ம் வாதி, அவரது சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளதாக தெரிந்துகொள்ளமுடிகிறது. அதன்படி, தாவா 7வது இனச்சொத்து மேற்படி பாலகிருஷ்ணனின் தனிப்பட்ட சொத்து என்ற உண்மை புலப்படுகிறது.

இவ்வழக்கில் வாதிகளால் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.19 கணிணி பட்டாவில் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள 8, 9, 10 இனச் சொத்துக்களுக்கு 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் மற்றும் சேட்டு மகன் கோவிந்தசாமி, மற்றொரு மகன் பொன்னுசாமி, ஆகியோர்கள் கூட்டு உரிமையாளர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

வாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள கடந்த 22.09.2010 தேதியிட்ட 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவர் பெயரில் உள்ள வா.சா.ஆ.12 கிரையஆவணத்தின் சான்றிட்ட நகல் மூலமாக, வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள 11, 12, 13 இனச்சொத்துக்கள் அனைத்தும், மேற்படி பாலகிருஷ்ணனால், தனிப்பட்ட பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

1ம் வாதியின் பெற்றோர் இறந்ததற்குப்பின், கூட்டுகுடும்பத்தின் கர்த்தா என்ற அடிப்படையில், 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவர் சொத்துக்களை நிர்வகித்து வந்துள்ள நிலையில், குடும்ப

சொத்துக்களில் இருந்து கிடைத்துள்ள கூட்டுகுடும்ப வருவாயை கொண்டு, மேற்படி பாலகிருஷ்ணன் தனிப்பட்ட பெயரில் பல்வேறு சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளதால், அவரது தனிப்பட்ட பெயரில் உள்ள சொத்துக்களும் 1ம் வாதி குடும்பத்து கூட்டுகுடும்ப சொத்துக்கள் என வாதிகள் வழக்கினை முன்வைத்துள்ளனர்.

வழக்குரை சொத்து விவரத்தில் வாதிகள் குறிப்பிட்டுள்ள 1 முதல் 6 இனச் சொத்துக்கள் மட்டும் 1ம் வாதியின் பெற்றோருக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்கள் என்பதை வாதிகள் வழக்கில் நிரூபித்துள்ளனர். மேற்படி சொத்துக்கள் குறித்து, 1ம் வாதியின் பெற்றோர் எந்தவொரு ஆவணங்களையும் எழுதி வைக்காமல் இறந்துள்ளனர் என்பதை தாவாவை எதிர்வழக்காடியுள்ள பிரதிவாதிகள் மறுக்கவில்லை.

இந்நிலையில், 1ம் வாதியின் பெற்றோருக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்களான தாவா 1 முதல் 6 இனச்சொத்துக்களில் 1ம் வாதியின் குடும்ப உறுப்பினர்கள் மூலமாக கூட்டுகுடும்ப வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில், வாதிகளால் இவ்வழக்கில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

வாதிகளால் இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள வா.சா.3 ராஜேந்திரன் என்பவர் தன்குறுக்குவிசாரணை வாய்மொழி சாட்சியத்தில்,

**" பாலகிருஷ்ணன் வீட்டில் முதல் பிறந்த நபர் பெயர் கோவிந்தராஜ். "** எனக் கூறியுள்ளார்.

மேற்படி, வாதிகள் தரப்பு சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள குறுக்குவிசாரணை வாய்மொழி சாட்சியத்தின்படி, 1ம் வாதி குடும்பத்தில், அவரது சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவர் குடும்பத்தில் மூத்த உறுப்பினர் இல்லை என்பதை கண்டறிந்துகொள்ள முடிகிறது.

இந்நிலையில், 1ம் வாதி குடும்பத்தின், மூத்த உறுப்பினராக இல்லாத 1ம் வாதியின் உடன்பிறந்த சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவர், 1ம் வாதி குடும்பத்தில், அவர்களது பெற்றோர் இறப்பிற்குப்பின், கூட்டுகுடும்ப கர்த்தா என்ற தகுதியில் குடும்ப சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்து, கூட்டுகுடும்ப உழைப்பினால் கிடைத்த வருமானத்தை கொண்டு, மேற்படி பாலகிருஷ்ணனின் தனிப்பட்ட பெயரில் பல்வேறு சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது என்ற வாதிகள் தரப்பு வழக்கினை சட்டப்படியாக இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்து, அதனை நிராகரிப்பு செய்கிறது.

தாவா சொத்துக்கள் குறித்து, 1ம் வாதி குடும்ப உறுப்பினர்களுக்கிடையில், நாளது தேதிவரை எந்தவொரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என வாதிகள் தரப்பு வழக்கில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு சங்கதியை வன்மையாக மறுத்துள்ள பிரதிவாதிகள் தரப்பில், 1ம் வாதியின் பெற்றோருக்கு சொந்தமான சுமார் 3 ஏக்கர் சொத்துக்கள் குறித்து, அவர்களது இறப்பிற்குப்பின், 1ம் வாதி குடும்ப உறுப்பினர்களுக்கிடையில், ஏற்கனவே வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதை வழக்கில் மறைத்து, வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்வழக்காடப்பட்டுள்ளது.

மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில், 1ம் வாதிக்கும், அவருடைய சகோதரர்களான பாலகிருஷ்ணன், கோவிந்தன் ஆகியோர்களுக்கும், தலா 0.75 சென்ட் சொத்தும், 1ம் வாதியின் உடன்பிறந்த ஐந்து சகோதரிகளுக்கும் சேர்த்து, மொத்தமாக 0.75 சென்ட் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதில், 1ம் வாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சர்வே எண்.187/37ல் உள்ள 0.75 சென்ட் விஸ்தீரண சொத்தை 1ம் வாதி,

அவரது சகோதரர் பாலகிருஷ்ணனுக்கு கடந்த 02.04.1987ல் கிரையம் கொடுத்துள்ளார் என பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ளனர்.

மேற்படி எதிர்வாதத்திற்கு வலுசேர்க்கும் வகையில், மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் வாதிகள் தரப்பில் இவ்வழக்கில் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில், பஞ்சாயத்து மூலமாக பெரிய மனிதர்கள் முன்னிலையில் சொத்துக்கள் குறித்து ஏற்பட்டுள்ள வாய்மொழி பாகப்பிரிவினையில் 1ம் வாதிக்கு கிடைத்துள்ள தாவா 7வது இனச்சொத்தை 1ம் வாதி , அவரது சகோதரர் பாலகிருஷ்ணனுக்கு கிரையம் கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின் உண்மைத்தன்மை குறித்து, வாதிகள் தரப்பில் எந்தவொரு முரண்பட்ட வாதமும் இவ்வழக்கில் முன்வைக்கப்படவில்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் குடும்ப சொத்துக்கள் குறித்து ஏற்கனவே 1ம் வாதி குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ள 1ம் வாதி, பின்னிட்டு, அதற்கு முற்றிலும் முரணாக தாவா சொத்துக்களில் நாளது தேதி வரை எந்தவொரு பாகப்பிரிவினையும் ஏற்படுத்திக்கொள்ளப்படவில்லை என்ற வழக்கு சங்கதியை முன்வைக்க சட்டப்படியாக முரண்தடை செய்யப்பட்டுள்ளார்.

இச்சூழ்நிலையில், 1ம் வாதி குடும்பத்திற்குள் ஏற்கனவே ஏற்பட்டுள்ள வாய்மொழி பாகப்பிரிவினையை வா.சா.ஆ.6 ஆவணத்தின்மூலம் ஒப்புக்கொண்டுள்ள 1ம் வாதி, மேற்படி மிகமுக்கியமான உண்மையை மறைத்து, இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

தாவா 1 முதல் 6 இனச் சொத்துக்கள் 1ம் வாதியின் பெற்றோருக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்கள் என வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5

வரையிலான ஆவணங்களின் மூலம் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணங்கள் கடந்த 1957ம் ஆண்டு முதல் 1966ம் ஆண்டுவரையிலான இடைப்பட்ட காலங்களில் ஏற்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு, சுமார் 45 ஆண்டுகள் கழித்து, இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தாவா 1 முதல் 6 இனச் சொத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களில் உட்பிரிவு மாற்றங்கள் கட்டாயம் ஏற்பட்டிருக்கும் என்பது நடைமுறை உண்மையாகும்.

பொதுவாக பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்படும் உரிமையியல் வழக்குகளில் வழக்குரை சொத்து விவரத்தில், சம்மந்தப்பட்ட சொத்துக்களில் பழைய மற்றும் புதிய சர்வே எண்களையும், அதன் புதிய உட்பிரிவு எண்களையும், மேற்படி சொத்துக்களை எளிதாக அடையாளம் காணும் வகையில், சொத்துக்களின் நான்குபுற செக்குப்பந்தி விவரங்களையும், வாதியால் தெளிவாக குறிப்பிடப்படவேண்டும் என்பது சட்டநடைமுறை ஆகும்.

ஆனால், இவ்வழக்கில் மேற்குறிப்பிட்ட சட்டநடைமுறை எதுவும், வாதிகளால் பின்பற்றப்படவில்லை என்பதை கண்டறிந்துகொள்ள முடிகிறது. ஆகையால், மேற்கூறியவாறு இந்நீதிமன்றத்தால் விவரிக்கப்பட்டுள்ள காரணங்களினால், எழுவினாக்கள் 1 முதல் 3 வாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு, விடையளிக்கப்படுகிறது.

<u>09). எழுவினாக்கள் 5 முதல் 9 –ற்கான தீர்வு:–</u>

கடந்த 26.09.2014ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவர் 15,16 பிரதிவாதிகள் பெயர்களுக்கு தாவா 1,5 இனச் சொத்துக்களில்

ஒரு பகுதியை கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக வாதிகளால் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 26.09.2014 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தின்மூலம் 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவர் 15, 16 பிரதிவாதிகள் பெயர்களுக்கு தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.187/37பி யில் 1 ஏக்கர் 28 சென்ட் சொத்தினை கிரையம் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆக வாதிகளால் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களை தனிப்பட்ட முறையில் ஏற்படுத்திக்கொடுக்க 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவருக்கு சட்டப்படியான உரிமை இல்லாத காரணத்தினால், மேற்படி இரு ஆவணங்களையும், சட்டப்படி செல்லாதவைகள் என விளம்புகை செய்ய வேண்டுமென வாதிகளால் ஓர் வழக்கு பரிகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது.

1ம் வாதியின் பெற்றோருக்கு சொந்தமான தாவா 1 முதல் 6 இனச் சொத்துக்களில் ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்ற எதிர்வாதம் இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முந்தைய எழுவினாக்களில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவருக்கு மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை மூலமும், 1ம் வாதியால் மேற்படி பாலகிருஷ்ணன் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின்மூலமும், கிடைக்கப்பெற்றுள்ள சொத்துக்கள் குறித்து, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆவணங்களை 15, 16 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திக்கொடுக்க மேற்படி பாலகிருஷ்ணனுக்கு சட்டப்படியாக உரிமை உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள 15, 16 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள நிலையில், மேற்படி இரு ஆவணங்களும் 13, 14 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ளது எனக்கூறி அவற்றை சட்டப்படி செல்லாதவைகள் என விளம்புகை செய்யவேண்டுமென வாதிகளால் இவ்வழக்கில் தவறான முறையில் விளம்புகை பரிகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1ம் வாதியால், அவரது சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள வா.சா.ஆ.6 கிரைய ஆவண சொத்தில் ஒரு பகுதியை கடந்த 25.09.2014 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் 17ம் பிரதிவாதிக்கும், அதே தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் மற்றொரு பகுதி சொத்தினை 18ம் பிரதிவாதிக்கும், அதே தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் மற்றொரு பகுதி சொத்தை 19ம் பிரதிவாதிக்கும் மேற்படி பாலகிருஷ்ணன் கிரையம் கொடுத்துள்ளார்.

மேற்படி, 17ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகவும், 18ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆகவும், 19ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகவும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும், சட்டப்படி செல்லாதவைகள் என்ற மற்றொரு விளம்புகை பரிகாரத்தை வாதிகள் வழக்கில் முன்வைத்துள்ளனர்.

வா.சா.ஆ.6 கிரையம் 1ம் வாதியால், அவரது சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவருக்கு கொடுத்துள்ளது உண்மையானது என 1ம்

வாதி ஒப்புக்கொள்ளப்பட்டு, மேற்படி ஆவணம் வழக்கில் வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.6 ஆவணத்தின்மூலம், கிரையம் பெறப்பட்டுள்ள சொத்துக்கள் 1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்ற இயல்பை பெற்றுள்ளது. இந்நிலையில், மேற்படி சொத்தினை வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.11 வரையிலான கிரைய ஆவணங்களின் மூலம் 17 முதல் 19 பிரதிவாதிகள் பெயர்களுக்கு மேற்படி பாலகிருஷ்ணன் கிரையம் கொடுத்துள்ளதில் சட்டப்படியாக எந்தவொரு தவறும் இல்லை என இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களினால், தாவாவில் 15 முதல் 19 வரையிலான பிரதிவாதிகள் பெயர்களில் உள்ள ஆவணங்கள் சட்டப்படி செல்லாதவைகள் என்ற விளம்புகை பரிகாரங்கள் பெறுவதற்கு வாதிகளுக்கு சட்டப்படியாக உரிமை இல்லை என முடிவு செய்யப்பட்டு, இவ்வழக்கின் எழுவினாக்கள் 5 முதல் 9 இந்நீதிமன்றத்தால் விடையளிக்கப்படுகின்றன.

**10) எழுவினா –11ற்கான தீர்வு :**

1ம் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் உயிருடன் இருந்த காலத்தில், 15, 16 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆவண சொத்துக்கள் குறித்து, ஆம்பூர் நீதிமன்றத்தில் அ.வ.எண்.72/2007 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கின் மேல்முறையீட்டு வழக்கு எண்.28/2010 வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பில் மேற்படி பாலகிருஷ்ணனுக்கு ஆதரவாக விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என 15, 16 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ளனர்.

மேற்படி அ.வ.எண்.72/2007 வழக்கின் வழக்குரை நகல் மட்டும் 15, 16 பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில், செல்வம் என்பவர் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கில் இவ்வழக்கில் கண்டுள்ள பிரதிவாதிகள் யாரும் தரப்பினர்களாக இல்லை.

அ.வ.எண்.72/2007 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆவணங்கள் எதையும், இந்நீதிமன்ற பரிசீலனைக்கு 15, 16 பிரதிவாதிகள் தரப்பில், இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்கு தொடர்பான மேல்முறையீட்டுவழக்கு எண்.28/2010 வழக்கு தொடர்பான ஆவணங்களையும், 15, 16 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இச்சூழ்நிலையில், மேற்குறிப்பிட்ட வழக்குகளின் நீதிமன்ற தீர்ப்புகள் இவ்வழக்கின் தீர்ப்பிற்கு முன்தீர்ப்பு தடை கோட்பாடு என்ற அடிப்படையில், எவ்வகையிலும் பொருந்தாது என இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, எழுவினா–11 தீர்வு காணப்படுகிறது.

11) <u>எழுவினாக்கள் 4 மற்றும் 10 ற்க்கான தீர்வு :</u>

அசல் வழக்கானது, ஆரம்பத்தில் 1ம் வாதியால், தாவா சொத்துக்களில் 1ம் வாதிக்கு 1/7 பாகம் வேண்டுமென முதன்மையான பரிகாரம் கேட்டு, தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது, 1ம் வாதியின் சட்டப்படியான வாரிசுகளான 2 முதல் 8 வாதிகள் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழக்குரையில், வழக்கினை தாக்கல் செய்துள்ள 1ம் வாதியின் நிலை என்ன? என்பது குறித்தும், 2 முதல் 8 வாதிகள் என்ன காரணத்திற்காக வழக்கில், எதனடிப்படையில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும், தெளிவான விளக்கங்களை குறிப்பிடவில்லை.

வழக்குரையில் குறிப்பிட்டுள்ள தாவா 1 முதல் 6 இனச்சொத்துக்கள் குறித்து, 1ம் வாதி குடும்ப உறுப்பினர்களுக்கிடையில், ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கண்டறிந்துள்ள நிலையில், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு சட்டப்படியாக எந்தவொரு பங்குரிமையும் கிடைக்க முடியாது என்று முடிவு செய்யப்பட்டு, எழுவினாக்கள் 4 மற்றும் 10 இந்நீதிமன்றத்தால் விடை காணப்படுகின்றன.

<u>12) எழுவினா 12 ற்க்கான தீர்வு :</u>

தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு சட்டப்படியாக எந்தவொரு பங்குரிமையும் இல்லை என ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ள நிலையிலும், தாவா சொத்துக்கள் குறித்து, 15 முதல் 19 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் சட்டப்படியாக செல்லக்கூடியவைகள் என முடிவு காணப்பட்டுள்ள நிலையிலும், தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் சட்டப்படியாக வாதிகளுக்கு கிடைக்க முடியாது என முடிவு செய்யப்பட்டு, எழுவினா–12 இந்நீதிமன்றத்தால் விடையளிக்கப்படுகிறது.

13) <u>எழுவினா 13 ற்க்கான தீர்வு :</u>

தாவா பரிகாரங்கள் அனைத்தும் வாதிகளுக்கு கிடைக்க முடியாது என மேற்கண்ட எழுவினாக்களில் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ள நிலையில், தாவாவில் வாதிகள் வேறு எந்த பரிகாரமும் பெற முடியாது என முடிவு செய்யப்பட்டு, எழுவினா–13 இந்நீதிமன்றத்தால் விடைகாணப்படுகிறது.

**14)** **முடிவில்**, தாவா தள்ளுபடி செய்யப்பட்டு, தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B
Digitally signed by RAJA B
Date: 2026.03.27 16:16:39 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

வா.சா.1 – கம்சலா

வா.சா.2 – நூருல்லாபாஷா

வா.சா.3 – ராஜேந்திரன்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| **ஆவணங்களின் வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.10.1957 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 17.11.1959 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.3 | 05.07.1962 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.4 | 17.09.1964 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.5 | 24.01.1966 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.6 | 02.04.1987 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.7 | 26.09.2014 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.8 | 26.09.2014 | கிரைய ஒப்பந்தம் சான்றிட்ட நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.9 | 25.09.2014 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.10 | 25.09.2014 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.11 | 25.09.2014 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.12 | 22.09.2010 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.13 | 25.02.2015 | 1ம் வாதியின் பிரமாணப்பத்திரம். |
| வா.சா.ஆ.14 | 25.02.2015 | 1ம் வாதியின் பிரமாணப்பத்திரம். |
| வா.சா.ஆ.15 | 25.02.2015 | 1ம் வாதியின் பிரமாணப்பத்திரம். |
| வா.சா.ஆ.16 | -- | பாலகிருஷ்ணன் இறப்பு சான்றிதழ். |
| வா.ச.ஆ.17 | -- | பாக்கியம் இறப்பு சான்றிதழ். |
| வா.சா.ஆ.18 | -- | கோவிந்தன் இறப்பு சான்றிதழ். |
| வா.சா.ஆ.19 | -- | கணிணி பட்டா நகல். |
| வா.சா.ஆ.20 | -- | கணிணி பட்டா நகல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> –**

பி.சா.1 – ரீட்டா

பி.சா.2 – ராஜா

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் </u>:–**

| **ஆவணங்களின் வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 26.09.2014 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.2 | 26.09.2014 | கிரைய ஒப்பந்தம் சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.3 | -- | கணிணி பட்டாக்கள்<br>( 2 எண்ணிக்கைகள்) |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.4 | -- | புலவரைப்படங்கள் ( 3 எண்ணிக்கைகள்) |
| பி.சா.ஆ.5 | -- | தீர்வைவரி ரசீகள் ( 3 எண்ணிக்கைகள்) |
| பி.சா.ஆ.6 | -- | அ.வ.எண்.72/2007 வழக்குரை சான்றிட்ட நகல். |

RAJA B
Digitally signed by RAJA B
Date: 2026.03.27 16:16:32 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.